1982 மார்ச் 23]

1974 ஆம் ஆண்டு முதல் பாசன மேம்பாட்டுப் பணிக்காக மைய அரசு அளித்த நிதி உதவி.

*வினா எண் 613—திரு. வேடசந்தூர் வி.வி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் Command Area Development Programme-க்காக மைய அரசு 1974 ஆம் ஆண்டு முதல் கொடுத்த உதவித் தொகை ஆண்டுவாரியாக எவ்வளவு ?

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் மைய அரசு அந்த திட்டத்திற்கு உதவாததற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விடை (அ) மற்றும், (ஆ) : அரசு கேட்டதற்கிணங்க, காவேரி பாசனப் பகுதியில் பாசன மேம்பாட்டு பணியினை 1974–75 முதல் 1980–81 ஆம் ஆண்டுகள் வரை செய்ததற்கு மைய அரசின் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 38·34 இலட்சம் மானியமாகவும், ரூபாய் 55·32 இலட்சம் கடனாகவும் 1980–81 ஆம் நிதியாண்டில் மைய அரசு வழங்கியுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த கமான்ட் டெவலப்மெண்ட் ஏரியா புரோக்ராமிற்காக மைய அரசு 1974–75 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய பணம் மாநில அரசால் பெறப்பட்டதா ? 1974–75 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1974–75 ஆம் ஆண்டிற்கான தொகை இப்போது பெறப்பட்டடதா ? அப்படியானால் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை நீர்ப்பாசனப் பகுதி மேம்பாட்டு ஆணைக்குழு அமைத்து மைய அரசின் நிதி உதவி கோரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு 1974–75 ஆம் ஆண்டு கோராததால் வேளாண்மைத்துறை மூலமாக 1980–81 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டு 1981 ஆம் ஆண்டில் 1974–75 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரைக்கும் உள்ள தொகை மைய அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த மானியத் தொகை 1971 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு மாநிலங்களுக்கு மைய அரசின் இந்த உதவி கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நம் மாநிலத்திலேயும் 1971 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய தொகையை மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டிலிருநது நாம் செய்திருக்கின்ற பணிகளுக்கு நாம் வாங்கியிருக்கிறோம். 1971 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்பட்டிருக்குமானால் அதை வாங்குவதற்கு உரிய முயற்சியில் அரசு ஈடுபடும்.

தாம்பரம்—காஞ்சிபுரம் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 614—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், முடிச்சூர், படப்பை வழியாகக் காஞ்சீபுரம் வரை உள்ள சாலை விரிவு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ). தாம்பரம் முடிச்சூர் சாலையில் கி.மீ. 1/8–3/0 மற்றும் 5/7– 6/10 ஆகிய இரு பகுதிகளை விரிவுபடுத்துவதற்கு முறையே ரூ. 36,000 மற்றும் ரூ. 33,000-க்கு மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. சாலையின் மற்றப் பகுதிகள் போக்கு வரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

[முற்பகல் 9–50]

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், முடிச்சூர், படப்பை வழியாக செல்கிற சாலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் ஒரு பகுதியிலே மட்டும் இப்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அது எப்போது முடிக்கப்படும் என்றும் ஏனைய பகுதியையும் செப்பனிடுவதற்கு பணிகள் முறையாக எடுத்தால் இது குறுக்கு வழியாக செல்கிற காரணத்தால் மற்ற பகுதிகளுக்கும் பயன்படும் என்று தெரிவித்து மற்ற பணிகளை எப்போது தொடங்குவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982–83-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தின்கீழ் 12 இலட்சம் ரூபாய் மேம்பாட்டு பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆண்டுக்குள்ளாக முடிக்கப்படும்.